# TNPSC GROUP I PRELIMINARY BATCH II 2026

## TEST I POLITY, SCIENCE, GEOGRAPHY, APTITUDE AND MENTAL ABILITY

1. Consider the following statements.
   1. The Southern most point of country is cape Comorin.
   2. The Southern most part of main land is Indira point.
   3. The North-South extent is 3214km.
   4. The east- west extent is 2933km.

   Which of the following are correct?

   a. 1, 2 b. 3, 4 c. 1, 3, 4
   d. All e. Answer not known

   பின்வரும் கூற்றுகளை ஆய்க
   1. நாட்டின் தென்கோடி பகுதி கன்னியாகுமரி ஆகும்
   2. இந்திய நிலப்பகுதியின் தென்கோடி இந்திரா முனை ஆகும்
   3. வடக்கு – தெற்கின் நீளம் 3214 கி.மீ
   4. கிழக்கு – மேற்கு நீளம் 2933 கி.மீ

   பின்வருவனவற்றுள் சரியானவை எவை?

   a. 1, 2 b. 3, 4 c. 1, 3, 4
   d. அனைத்தும் e. விடை தெரியவில்லை

2. Consider the following statements.
   1. The Himalayas are formed due to tectonic activity.
   2. It stretches for a distance of 2500km from Indus gorge in east to Brahmaputra gorge in west.
   3. The width varies from 500km in Kashmir to 200km in Arunachal Pradesh.

   Which of above are correct?

   a. 1, 2 b. 1, 2, 3 c. 1, 3
   d. 2, 3 e. Answer not known

   பின்வரும் கூற்றுகளை ஆய்க
   1. புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக இமயமலை உருவாகியது
   2. இது கிழக்கே சிந்து பள்ளதாக்கிலிருந்து மேற்கில் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு வரை 2500 கி.மீ நீளத்திற்க பரவியுள்ளது
   3. காஷ்மீர் பகுதியில் 500 கி.மீ அகலத்துடனும், அருணாச்சலப் பிரதேசத்தில் 200 கி.மீ அகலத்துடனும் வேறுபடுகிறது.

   மேற்கூறியவற்றுள் சரியானவை எவை?

   a. 1, 2 b. 1, 2, 3 c. 1, 3
   d. 2, 3 e. விடை தெரியவில்லை

3. Which of the following statements are true about the location and extent of India?
   i. India is divided into almost two equal halves by tropic of cancer.
   ii. India is the second largest country of the world in area
   iii. The latitude and longitudinal extend is nearly thirty degrees.
   iv. The standard meridian of India passes through Bhopal

   a. (ii) and (iii) only  b. (i), (ii) and (iv) only  c. (i) and (iii) only
   d. (i) (iii) and (iv) only  e. Answer not known

   இந்தியாவின் இருப்பிடம் மற்றும் பரப்பளவு குறி த்துப் பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
   i. கடக ரேகையினால் இந்தியா ஓரளவிற்கு இரண்டு சமப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
   ii. பரப்பளவில் உலகின் இரண்டாவது பெரிய நாடு இந்தியா
   iii. அட்ச மற்றும் தீர்க்க ரேகைகளுக்கு இடையே உள்ள இடைவெளி கிட்டதட்ட முப்பது டிகிரி ஆகும்.
   iv. இந்திய திட்ட தீர்க்க ரேகை போபால் வழியாக கடந்து செல்லும்

   a. (ii) மற்றும் (iii) மட்டும்  b. (i), (ii) மற்றும் (iv) மட்டும்
   c. (i) மற்றும் (iii) மட்டும்  d. (i), (iii) மற்றும் (iv) மட்டும்
   e. விடை தெரியவில்லை

4. Match the following

   | | |
   |---|---|
   | A. Kashmir- Punjab Himachal Himalayas | 1. Tista and dihang |
   | B. Kumaon Himalayas | 2. kali and Tista |
   | C. Central – Nepal Himalayas | 3. Indus and Sutlej |
   | D. Assam eastern Himalayas | 4. Sutlej and kali |

   பின்வருவனவற்றைப் பொருத்துக

   | | |
   |---|---|
   | A. காஷ்மீர் - பஞ்சாப் - இமாச்சல இமயமலைகள் | 1. திஸ்டா மற்றும் திகாங் |
   | B. குமாயூன் இமயமலைகள் | 2. காளி மற்றும் திஸ்டா |
   | C. மத்திய நேபாள இமயமலைகள் | 3. சிந்து மற்றும் சட்லெஜ் |
   | D. அசாம் கிழக்கு இமயமலைகள் | 4. சட்லெஜ் மற்றும் காளி |

   | | A | B | C | D |
   |---|---|---|---|---|
   | a. | 3 | 4 | 1 | 2 |
   | b. | 4 | 3 | 2 | 1 |
   | c. | 4 | 3 | 1 | 2 |
   | d. | 3 | 4 | 2 | 1 |

5. Which of the following statement is not correct?
   a. The Northern part of western ghats is known as Sahyadris.
   b. The height of Sahyadris increases from North to South.
   c. The eastern ghats meet western ghats at Nilgiris
   d. The western ghats are not continuous range
   e. Answer not known

பின்வரும் கூற்றுகளில் தவறானது எது
a. மேற்கு தொடர்ச்சி மலையின் வடபகுதி சயாத்ரி என்றழைக்கப்படுகிறது
b. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லச் செல்ல சயாத்ரி உயரம் அதிகரிக்கிறது
c. கிழக்கு தொடர்ச்சி மலைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளும் நீலகிரியில் ஒன்றிணைகின்றன
d. மேற்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியான மலைகள் அல்ல
e. விடை தெரியவில்லை

6. Which of the following statements are correct?
i. Rajasthan plains is located to the west of Aravalli range
ii. Punjab-Haryana plains lies to the north-east of the great Indian desert.
iii. Ganga plains extends from the Yamuna River in the west to Mizoram in the east.
iv. Brahamaputra plains is located mainly in the state of Meghalaya
a. i, iii and iv only b. i, and ii only c. ii and iii only
d. ii and iv only e. Answer not known
கீழ்க்கண்டவற்றுள் எவை சரியான வாக்கியங்கள்?
i. இராஜஸ்தான் சமவெளி ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் அமைந்துள்ளது.
ii. பஞ்சாப்-ஹரியானா சமவெளிகள் இந்திய பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன.
iii. கங்கைச் சமவெளி மேற்கில் யமுனை ஆற்றிலிருந்த கிழக்கில் மிசோரம் வரை பரவியுள்ளது.
iv. பிரம்மபுத்திரா சமவெளியின் பெரும்பகுதி மேகாலயாவில் அமைந்துள்ளது.
a. (i), (iii) மற்றும் (iv) b. (i) மற்றும் (ii) மட்டும்
c. (ii) மற்றும் (iii) மட்டும் d. (ii) மற்றும் (iv) மட்டும்
e. விடை தெரியவில்லை

7. Which of the following statements are true about Himalayas?
i. The Greater Himalayas are also called Himadri.
ii. The Greater Himalayas receive more rainfall compared to the lesser Himalayas and the Siwalik.
iii. Major hill stations are located in the Himachal Range.
a. (i) only b. (i) and (iii) only c. (i) and (ii) only
d. (ii) and (iii) only e. Answer not known
இமயமலை பற்றிக் கூறப்படும் பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
i. பெரிய இமயமலை இமாத்ரி என்று அழைக்கப்படும்.
ii. சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும் போது இப்பகுதி அதிக மழையைப் பெறுகின்றது.
iii. புகழ் பெற்ற கோடை வாழிடங்கள் இமயமலைத் தொடரில் அமைந்துள்ளன.

a. (i) மட்டும் b. (i) மற்றும் (iii) மட்டும்
c. (i) மற்றும் (ii) மட்டும் d. (ii) மற்றும் (iii) மட்டும்
e. விடை தெரியவில்லை

8. Consider the following statements.
1. The desert lies in the western part of the Aravalli range.
2. It covers ¾ of rajasthan state.
3. The actual desert region is known as Bhangar.
4. Semi- desert region is known as Marusthali.
Which of the following are correct?
a. 1, 3, 4 b. 1 only c. 1, 2, 4
d. All e. Answer not known
பின்வரும் கூற்றுகளை ஆய்க
1. தார் பாலைவனம், ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கே அமைந்துள்ளது
2. இது இராஜஸ்தான் மாநிலத்தில் நான்கில் மூன்று பங்கிற்கு பரவியுள்ளது
3. உண்மையான பாலைவனப் பகுதி பாங்கர் என்று அழைக்கப்படுகிறது
4. அரை பாலைவனப் பகுதி மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது
பின்வருவனவற்றுள் சரியானவை எவை?
a. 1, 3, 4 b. 1 மட்டும் c. 1, 2, 4
d. அனைத்தும் e. விடை தெரியவில்லை

9. Which channel separates Andaman and Nicobar group?
a. 10 degree channel b. 9 degree channel c. 8 degree channel
d. 6 degree channel e. Answer not known
அந்தமான் மற்றும் நிகோபர் தீவுக்கூட்டங்களைப் பிரிக்கம் கால்வாய்
a. 10˚ கால்வாய் b. 9˚ கால்வாய் c. 8˚ கால்வாய்
d. 6˚ கால்வாய் e. விடை தெரியவில்லை

10. Match the following

| Disease | Pathogen |
|---|---|
| A. Measles | 1. Myxovirus |
| B. Chickenpox | 2. Corynebacterium diphtheria |
| C. Whooping cough | 3. Bordetella pertussis |
| D. Diphtheria | 4. Varicella zoster virus |
| E. Influenza | 5. Rubella virus |

பொருத்துக:

| நோய் | நோய்க்காரணி |
|---|---|
| A. தட்டம்மை | 1. மைக்ஸோ வைரஸ் |
| B. சின்னம்மை | 2. கோர்னிபாக்டீரியம் டி.்.ப்தீரியா |
| C. கக்குவான் இருமல் | 3. பேர்டெடெல்லா பெர்டுசிஸ் |
| D. தொண்டை அழற்சி நோய் | 4. வாரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ் |
| E. இன்புளூயன்சா | 5. ரூபெல்லா வைரஸ் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 5 | 1 | 3 |
| b. | 1 | 2 | 3 | 5 | 4 |
| c. | 5 | 4 | 3 | 2 | 1 |
| d. | 3 | 4 | 2 | 5 | 1 |

e. விடை தெரியவில்லை

11. Match the following

| | |
|---|---|
| A. BCG | 1. Diphtheria |
| B. DPT | 2. Rubella |
| C. MMR | 3. Tuberculosis |
| D. TT | 4. Tetanus |

பட்டியல் ஒன்றுடன் இரண்டைப் பொருத்துக:

| | |
|---|---|
| A. BCG | 1. டிப்தீரியா |
| B. DPT | 2. ரூபெல்லா |
| C. MMR | 3. காசநோய் |
| D. TT | 4. டெட்டனஸ் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 3 | 1 | 2 | 4 |

12. Choose the incorrect statement about Dengue fever

a. It caused by flavi virus
b. It spreaded by Aedes Egypti mosquitoes
c. Decrease in Blood platelets
d. Decrease in white blood cells
e. Answer not known

டெங்கு காய்ச்சல் பற்றி தவறான கூற்று எது?

a. பிளேவி வைரசினால் ஏற்படுகிறது
b. ஏடிஸ் எஜிப்டி கொசுக்களினால் பரவுகிறது
c. இதில் ரத்தத் தட்டுகளின் எண்ணிக்கை குறையும்
d. இதில் ரத்த வெள்ளையணுக்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படும்
e. விடை தெரியவில்லை

13. Identify the correctly matched pairs among the following.

I. First equation of motion – $v = u + at$
II. Second equation of motion – $s = at + \frac{1}{2} ut^2$
III. Third equation of motion – $u^2 = v^2 + 2as$

a. I and II only  b. II only  c. All the above
d. I only  e. Answer not known

APPOLO STUDY CENTRE

பின்வருவனவற்றில் சரியான இணையை தேர்ந்தெடு.

I. முதல் இயக்கச் சமன்பாடு – $v = u + at$

II. இரண்டாம் இயக்கச் சமன்பாடு – $s = at + \frac{1}{2} ut^2$

III. மூன்றாவது இயக்கச் சமன்பாடு – $u^2 = v^2 + 2as$

a. I மற்றும் II b. II மட்டும் c. அனைத்தும்

d. I only e. Answer not known

14. Consider the following statements.

Assertion (A): Diamond is not a good conductor of electricity.

Reason (R) : It has no free electron.

a. Both (A)and (R) true and (R) is the reason for (A)

b. Both (A)and (R) true and (R) is not the correct reason for (A)

c. (A) is true but (R) is false

d. Both (A) and (R) are false

e. Answer not known

கீழ்கண்ட வாக்கியங்களை கவனிக்கவும்.

கூற்று(A): வைரம் ஒரு மின்கடத்தி அல்ல.

காரணம்(R) : இது தனித்த எலக்ட்ரானை பெற்றிருக்கவில்லை.

a. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி (R) ஆனது கூற்று (A)–ன் சரியான காரணம் ஆகும்.

b. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி (R) ஆனது கூற்று (A)–ன் சரியான காரணம் அல்ல.

c. கூற்று (A) சரி, காரணம் (R) தவறு

d. கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு

e. விடை தெரியவில்லை

15. Consider the following:

Assertion (A): Workdone by centripetal force in uniform circular motion is zero.

Reason (R): In uniform circular motion, the centripetal force is perpendicular to the displacement.

a. (A) alone is correct (R) is incorrect

b. (A) and (R) are correct and (R) is the correct explanation of (A)

c. (A) and (R) are incorrect

d. (A) and (R) are correct but (R) is not the correct explanation of (A)

e. Answer not known

பின்வருவனவற்றை ஆய்க.

கூற்று (A): சீரான வட்ட இயக்கத்தில், மையநேக்கு விசையினால் பொருளின் மீது செய்யப்பட்ட வேலை சுழியாகும்.

காரணம் (R): சீரான வட்ட இயக்கத்தில், மையநோக்கு விசை பொருளின் இடப்பெயர்ச்சிக்கு செங்குத்தாக செயல்படுகிறது.

a. (A) மட்டும் சரி (R) தவறு

b. (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R), (A) விற்கு சரியான விளக்கமாகும்.

c. (A) மற்றும் (R) இரண்டும் தவறு

d. (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R), (A) விற்கு சரியான விளக்கமல்ல

e. விடை தெரியவில்லை

16. If a person is moving from pole to equator, the centrifugal force acting on him

a. Increase
b. Decrease
c. Remains the same
d. Increase and then decrease
e. Answer not known

ஒரு மனிதன் துருவத்திலிருந்து நில நடுக்கோட்டை நோக்கி வரும்போது அவன் மேல் செயல்படும் மைய விலக்கு விசை எவ்வாறு இருக்கும்

a. அதிகரிக்கும்
b. குறையும்
c. மாறாமல் இருக்கும்
d. அதிகரித்து பின் குறையும்

17. Which of the following is an example for non-conservative force?

a. Elastic spring force
b. Magnetic force
c. Frictional force
d. Electrostatic force

பின்வருவனவற்றுள் எது ஆற்றல் மாற்றும் விசை?

a. மீட்சி சுருள்வில் விசை
b. காந்தவிசை
c. உராய்வு விசை
d. நிலைமின்னியல் விசை

18. Match the following

A. Unbalanced force — 1. Crate pulled by two people
B. Unlike parallel force — 2. Action of lever
C. Balanced force — 3. Tag of war
D. Like parallel force — 4. A book at rest.

பொருத்துக

A. சமன் செய்யப்படாத விசை — 1. இருவரால் இழுக்கப்படும் மரப்பெட்டி
B. மாறுபட்ட இணைவிசை — 2. நெம்புகோல்
C. சமன் செய்யப்பட்ட விசை — 3. கயிறு இழுத்தல் போட்டி
D. ஒத்த இணைவிசை — 4. ஓய்வுநிலையில் உள்ள புத்தகம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

19. The Causative Organism Bordetella Pertussis affecting the respiratory tract causes ______ disease.
a. Diphtheria b. Tuberculosis c. Polio Myelitis
d. Whooping Cough e. Answer not known
நோய்க் காரணியான போர்டெடெல்லா பெர்டுசிஸ் சுவாசக் குழாய் பகுதியை பாதித்து ___________ நோயை ஏற்படுத்துகிறது.
a. தொண்டை அழற்சி நோய் b. காசநோய் c. போலியோ மைலிடிஸ்
d. கக்குவான் இருமல் e. விடை தெரியவில்லை

20. The wings of the aeroplane was designed based on
a. Torricelli's theorem b. Euler's theorem c. Bernoulli's theorem
d. Alembert's theorem e. Answer not known
வான ஊர்தியின் இறக்கை _____ அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
a. டார்ரிசெல்லி தேற்றம் b. ஆய்லர் தேற்றம் c. பெர்னோலி தேற்றம்
d. ஆலம்பர்ட் தேற்றம் e. விடை தெரியவில்லை

APPOLO STUDY CENTRE

21. Which of the following sexually transmitted diseases are caused by bacteria?
a. Chancroid b. Chlamydiasis
c. Lymphogranuloma venereum d. All of these
பின்வரும் பால்வினை நோய்களுள் எது பாக்டீரியாவால் தோற்றுவிக்கப்படுகிறது?
a. கான்க்ராய்டு b. கிளாமிடியாஸிஸ்
c. லிம்ஃபோகிரானுலோமா வெனரியம் d. இவை அனைத்தும்

22. Which of the following statement is correct.
I. Hydel power stations convert kinetic energy into electrical energy.
II. They have long economic lives but high operating cost.
a. I only b. II only c. Both I and II
d. None of the aove
பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
I. நீர்மின் நிலையங்களில் இயக்க ஆற்றல் மின்னாற்றலாக மாற்றப்படுகிறது.
II. அவை அதிக காலம் இயங்கக்கூடியவை ஆனால் அதிக செலவுள்ளது.
a. I மட்டும் b. II மட்டும்
c. I மற்றும் II d. மேற்கூறிய எதுவும் அல்ல.

23. Identify the correctly matched pairs:
I. Motion in one dimension - free fall
II. Motion in two dimension - Motion of carom coin
III. Motion in three dimension - Bird flying in sky
a. I and II only b. I and III only
c. I, II and III d. I only

பின்வருவனவற்றுள், சரியாக பொருத்தப்பட்டுள்ள இணைகளை அடையாளம் காண்க.

I. ஒரு பரிமாண இயக்கம் - தடையின்றி தானே விழும் பொருள்
II. இருபரிமாண இயக்கம் - கேரம் பலகையின் வில்லை
III. முப்பரிமாண இயக்கம் - வானில் பறக்கும் பறவை

a. I, II மட்டும் b. I, III மட்டும் c. I, II மற்றும் III d. I மட்டும்

24. Match the following:

| | |
|---|---|
| A. 1 erg | 1. 4.186 J |
| B. 1 electron vol | 2. $1.6\times 10^{-19}$ J |
| C. 1 Calorie | 3. $3.6 \times 10^{6}$ J |
| D. 1 KWh | 4. $10^{-7}$ J |

பின்வருவனவற்றைப் பொருத்துக.

| | |
|---|---|
| A.1 எர்க் | 1. 4.186 J |
| B. 1 எலக்ட்ரான் வோல்ட் | 2. $1.6\times 10^{-19}$ J |
| C. 1 கலோரி | 3. $3.6 \times 10^{6}$ J |
| D. 1 கிலோவாட் மணி | 4. $10^{-7}$ J |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 3 | 2 | 4 | 1 |
| d. | 3 | 4 | 2 | 1 |

25. A particle undergoes uniform circular motion. The angular momentum of the particle remain conserved about,

a. The centre point of the circle.
b. The point on the circumference of the circle.
c. Any point inside the circle
d. Any point outside the circle

துகள் ஒன்று சீரான வட்ட இயக்கத்திற்கு உட்படுகிறது. கோண உந்தம் எதைப் பொருத்து மாறாது?

a. வட்டத்தின் மையத்தை
b. வட்டப்பரிதில் ஏதேனும் ஒரு புள்ளியை
c. வட்டத்தின் உள்ளே ஏதேனும் ஒரு புள்ளியை
d. வட்டத்தின் வெளியே ஏதேனும் ஒரு புள்ளியை

26. Identify the incorrect pair

| Disease | Causative Agent |
|---|---|
| a. Influenza | - H1N1 |
| b. Typhoid | - Mycobacterium |
| c. Malaria | - Plasmodium |
| d. Encephalities | - Herpes Simplex |

தவறான இணையைத் தேர்ந்தெடு:

| நோய் | | நோய்க்காரணி |
|---|---|---|
| a. இன்புளூயன்சா | - | H1N1 |
| b. டைபாய்டு | - | மைகோபாக்டீரியம் |
| c. மலேரியா | - | பிளாஸ்மோடியம் |
| d. என்செபலிடிஸ் | - | ஹெர்பஸ் சிம்பிலக்ஸ் |

27. Which of the following statements about Thar desert is/are correct?
1. World 9th largest sub tropical desert.
2. World 12th largest desert.
3. Actual desert region is Marusthali
4. Semi desert region is Bhangar.

a. 1, 3, 4 are correct b. 1, 2 are correct
c. 3, 4 are correct d. All are correct

தார் பாலைவனம் பற்றி பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
1. உலகில் 9 ஆவது பெரிய உப அயன மண்டல பாலைவனம்
2. உலகின் 12 வது மிகப் பெரிய பாலைவனம்
3. உண்மையான பாலைவனப்பகுதி மருஸ்தலி என்றழைக்கப்படுகிறது.
4. அரை பாலைவனப்பகுதி பாங்கர் என்றழைக்கப்படுகிறது.

a. 1, 2, 3, 4 சரி b. 1, 2 சரி c. 3,4 சரி d. அனைத்தும் சரி

28. Match the following:

| | |
|---|---|
| A. Bhabar plain | 1. New alluvial tracts |
| B. Tarai Tract | 2. Composed of gravels and Unassorted Sediments |
| C. Khadar Plains | 3. Older alluvial tracts |
| D. Bhangar Plains | 4. Zone of excessive dampness |

பொருத்துக.

| | |
|---|---|
| A. பாபர் சமவெளி | 1. புதிய வண்டல் மண் |
| B. தராய் மண்டலம் | 2. பெருமணல்கள், பலதரப்பட்ட படிவுகளால் ஆனபகுதி |
| C. காதர் சமவெளி | 3. பழைய வண்டல் ஆன பகுதி |
| D. பாங்கர் சமவெளி | 4. ஆதிக ஈரப்பதம் கொண்ட பகுதி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 2 | 4 | 3 | 1 |
| d. | 3 | 4 | 1 | 2 |

29. The western part of central highlands is known as
a. Aravalli range b. Rann of Kutch c. Malwa plateau
d. Satpura range e. Answer not known

மத்திய உயர்நிலங்களின் மேற்கு பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
a. ஆரவல்லி மலைத்தொடர் b. கட்ச் உவர் சதுப்பு நிலம்
c. மாளவப் பீடபூமி d. சாத்புரா மலைத்தொடர்
e. விடை தெரியவில்லை

30. Consider the following statements.

1. The Northern part of western coastal plain is Kanara.
2. The middle part is Kankan plain.
3. Vembanad is a famous back water lake found in the Kerala backwaters

Which of the following are correct?

a. 1, 3 b. 2, 3 c. 3
d. All e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

1. மேற்கு கடற்கரையின் வடபகுதி கனரா கடற்கரை எனப்படுகிறது
2. மத்திய பகுதி கொங்கணக் கடற்கரை என அழைக்கப்படுகிறது
3. கேரளா கடற்கழியில் உள்ள ஒரு முக்கியமான ஏரி வேம்பநாடு ஏரி ஆகும்

பின்வருவனவற்றுள் சரியானவை எவை?

a. 1, 3 b. 2, 3 c. 3 மட்டும்
d. அனைத்தும் e. விடை தெரியவில்லை

31. Which of the following is not correct?

a. Deltaic plain covers about 5lakh $km^2$ in the lower reaches of ganga river.
b. The deltaic plain consists of old mud, new mud and marsh.
c. In the delta region, the uplands are called chars.
d. In the delta region, the marshy areas are called Bils.
e. Answer not known

பின்வருவனவற்றுள் தவறானது எது?

a. டெல்டா சமவெளி, கங்கை ஆற்றின் கடைசிப்பகுதியாக சுமார் 5 லட்சம் சதுர கி.மீ பரப்பை உள்ளடக்கியது
b. டெல்டா சமவெளி புதிய வண்டல், பழைய வண்டல் மற்றும் சதுப்புநிலங்களைக் கொண்ட ஒரு பகுதியாகும்
c. டெல்டா சமவெளியில் உயர் நிலப்பகுதி "சார்ஸ்" என அழைக்கப்படுகின்றன
d. டெல்டா சமவெளியின் சதுப்பு நிலப்பகுதி "பில்ஸ்" என அழைக்கப்படுகின்றன
e. விடை தெரியவில்லை

32. Consider the following.

1. Zaskar 2. Ladakh 3. Kailash 4. Karakoram

Which of above are ranges of trans-Himalayas?

a. 1, 2, 3 b. All c. 1, 2, 4
d. 1, 3, 4 e. Answer not known

பின்வருவனவற்றை ஆய்க

1. சாஸ்கர் 2. லடாக் 3. கைலாஷ் 4. காரகோரம்

மேற்காணுபவற்றுள் எவை ட்ரான்ஸ் இமயமலைத் தொடர்கள்?

a. 1, 2, 3 b. அனைத்தும் c. 1, 2, 4
d. 1, 3, 4 e. விடை தெரியவில்லை

33. Match the following

| List-I | List-2 |
|---|---|
| A. Amendment of the Constitution | 1. Constitution of Britain |
| B. Directive of the state policy | 2. Constitution of Canada |
| C. Single citizenship | 3. Constitution of South Africa |
| D. The Union- state Relations | 4. Irish Constitution |

பின்வருவனவற்றை பொருத்தவும்

| பகுதி-I | பகுதி- II |
|---|---|
| A. அரசியலமைப்பின் திருத்தம் | 1. பிரிட்டன் அரசியலமைப்பு |
| B. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறை கோட்டுபாடு | 2. கனடாவின் அரசியலமைப்பு |
| C. ஒற்றைக் குடியுரிமை | 3. தென்னாப்பிரிக்க அரசியலமைப்பு |
| D. ஒன்றிய மாநில அரசின் உறவுகள் | 4. அயர்லாந்து அரசியலமைப்பு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 4 | 3 |
| b. | 3 | 4 | 1 | 2 |
| c. | 1 | 4 | 2 | 3 |
| d. | 3 | 1 | 4 | 2 |

34. Which of the following statements are correct about the Constitution of India?

1. Powers of the Municipalities are given in Part IX A of the Constitution.
2. Emergency provisions are given in Part XVIl of the Constitution.
3. Provisions related to the amendment of the Constitution are given in Part XX of the Constitution.

a. 1and 2 only b. 2 and 3 only c. 1 and3 only d. 1,2 and 3

இந்திய அரசியலமைப்பு பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

1. நகராட்சிகளின் அதிகாரங்கள் அரசியலமைப்பின் பகுதி IX A இல் கொடுக்கப்பட்டுள்ளன.
2. அவசரகால விதிகள் அரசியலமைப்பின் பகுதி XVII இல் கொடுக்கப்பட்டுள்ளன.
3. அரசியலமைப்பை திருத்துவது தொடர்பான விதிகள் அரசியலமைப்பின் பகுதி XX இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பின்வரும் குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

a. 1 மற்றும் 2 மட்டும் b. 2 மற்றும் 3 மட்டும்

c. 1 மற்றும் 3 மட்டும் d. 1, 2 மற்றும் 3

35. Choose the right answer about the constituent assembly

i. 10 Women members were there in the constituent assembly

ii. H.V.R. Iyengar was the the secretary of the constituent assembly.

a. i only b. ii only c. i and ii d. None of the above

அரசியல் நிர்ணய சபையைப் பொறுத்து சரியான விடைகளைத் தேர்வு செய்க.
i. அரசியல் நிர்ணய சபையில் 10 பெண் உறுப்பினர்கள் இருந்தனர்
ii. அரசியல் நிர்ணய சபையின் செயலராக HVR ஐயங்கார் செயல்பட்டார்
a. i மட்டும் b. ii மட்டும் c. i மற்றும் ii d. இவை எதுவுமில்லை

36. The design of the National flag was adopted by the constituent Assembly of India on
a. 20 June 1947 b. 22 July 1947 c. 21 Aug 1947 d. 23 Nov 1947
தேசிய கொடியின் வடிவமைப்பு இந்திய அரசியல் நிர்ணயச் சபையால் _________ அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.
a. 20 ஜூன் 1947 b. 22 ஜூலை 1947
c. 21 ஆகஸ்டு 1947 d. 23 நவம்பர் 1947

37. Consider the following statements.
1. Total strength of constituent assembly is 389.
2. Seats were allocated in proportion to their population.
3. Representatives of princely states were elected by the people.
a. All are correct b. 1 and 2 are correct
c. 2 and 3 are correct d. All are wrong
பின்வரும் கூற்றுகளை ஆராயவும்.
1. அரசியல் நிர்ணய சபையின் மொத்த உறுப்பினர் 389.
2. மக்கள்தொகை விகிதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்டன.
3. சுதேச அரசுகளின் பிரதிநிதிகள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
a. அனைத்தும் சரி b. 1 மற்றும் 2 சரி
c. 2 மற்றும் 3 சரி d. அனைத்தும் தவறு

38. Identify the incorrect pair.
a. States Committee - Jawaharlal Nehru
b. Fundamental Rights Sub-Committee - H.C. Mukerjee
c. Steering Committee - Dr. Rajendra Prasad
d. House Committee - B. Pattabi Sittaramayya
தவறான ஜோடியை கண்டறிக.
a. மாநிலங்கள் குழு - ஜவஹர்லால் நேரு
b. அடிப்படை உரிமைகள் துணைக்குழு - H.C. முகர்ஜி
c. இயக்கக் குழு - டாக்டர். இராஜேந்திர பிரசாத்
d. அவை குழு - பி.பட்டாபி சீதாராமய்யா

39. Match the following:

| | |
|---|---|
| A. State | 1.A. V Dicey |
| B. Sovereignty | 2. Machiavelli |
| C. Separation of Powers | 3. Bodin |
| D. Rule of Law | 4. Montesquieu |

பொருத்துக :

| | | |
|---|---|---|
| A. அரசு | | 1. A. V. டைஸி |
| B. இறையாண்மை | | 2. மாக்கியவல்லி |
| C. அதிகார பிரிவினை | | 3. போடின் |
| D. சட்டத்தின் ஆட்சி | | 4. மாண்டெஸ்கியூ |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 2 | 1 | 3 | 4 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 1 | 3 | 2 | 4 |

40. Consider the following statements:
I. The Preamble was enacted before the enactment of the entire constitution
II. The Preamble is a part of the Constitution but has no legal effect independently of other parts
III. It is enforceable through courts of Law
IV. The objectives Resolution by Jawaharlal Nehru finally became the foundation for the Preamble

Which of the statements given above are incorrect?
a. I, II only b. II, IV only c. I, III only d. I, II, III only

பின்வரும் கூற்றுகளை ஆய்க:
I. முகவுரை முழு அரசியலமைப்பும் இயற்றப்படுவதற்கு முன்பு இயற்றப்பட்டது.
II. முகவுரை அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும், ஆனால் மற்ற பகுதிகளைப் பொறுத்து சட்டரீதியான விளைவை தனித்தனியாகக் கொண்டிருக்கவில்லை.
III. இது சட்ட நீதிமன்றங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
IV. ஜவஹர்லால் நேருவின் குறிக்கோள் தீர்மானம் இறுதியாக முகவுரைக்கு அடிப்படையாக மாறியது.

மேற்கண்ட கூற்றுகளில் எது / எவை தவறானது?
a. I, II மட்டும் b. II, IV மட்டும் c. I, III மட்டும் d. I, II, III மட்டும்

41. The cabinet mission which consisted of three members arrived in India on
a. May 16, 1946 b. Jan 6, 1946 c. Mar 24, 1946 d. Apr 26, 1946

மூன்று உறுப்பினர்கள் கொண்ட அமைச்சரவைக்குழு இந்தியாவிற்கு எப்போது வந்தது?
a. மே 16, 1946 b. ஜனவரி 6, 1946 c. மார்ச் 24, 1946 d. ஏப்ரல் 26, 1946

42. Match the following

| | |
|---|---|
| A. Part V | 1. Tribunals |
| B. Part VIII | 2. Official language |
| C. Part XVII | 3. The union government |
| D. Part XVIII | 4. The union territories |
| E. Part XIV-A | 5. Emergency provision |

பொருத்துக:

| | |
|---|---|
| A. பகுதி V | 1. தீர்ப்பாயங்கள் |
| B. பகுதி VIII | 2. அலுவலக மொழி |
| C. பகுதி XVII | 3. ஒன்றிய அரசாங்கம் |
| D. பகுதி XVIII | 4. யூனியன் பிரதேசங்கள் |
| E. பகுதி XIV – A | 5. அவசரகால அம்சங்கள் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 5 | 2 | 1 |
| b. | 4 | 5 | 2 | 3 | 1 |
| c. | 1 | 4 | 5 | 2 | 3 |
| d. | 3 | 4 | 2 | 5 | 1 |

43. Who said politics was all about political authority and class conflict

a. Karl Marx b. Fredrick Engels c. David Easton d. Robert Micheal

”அரசியல் என்பது அரசியல் அதிகாரம் மற்றும் வகுப்பு மோதல்கள்” பற்றியதாகும். இக்கூற்று யாருடையது?

a. கார்ல் மார்க்ஸ் b. பிரடெரிக் இங்கெல்ஸ்

c. டேவிட் ஈஸ்டன் d. இராபர்ட் மைக்கேல்

44. How many women members were there in the Constituent Assembly, and what was the total number of members?

a. 16 and 389 b. 15 and 300 c. 15 and 389 d. 18 and 300

அரசியல் நிர்ணய சபையில் இருந்த பெண் உறுப்பினர் மற்றும் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை யாது?

a. 16 மற்றும் 389 b. 15 மற்றும் 300 c. 15 மற்றும் 389 d. 18 மற்றும் 300

45. Consider the following statements

1. The constitution was adopted on 26 November, 1949.
2. It contained 20 parts, 395 articles and 8 schedules.
3. The constitution came into force on 26 January, 1950.

a. 1, 3 are correct b. 1, 2 are correct

c. 2, 3 are correct d. All are correct

பின்வரும் கூற்றுகளை ஆராய்க

1. இந்திய அரசியலமைப்பு 1949, நவம்பர் 26 ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது
2. இது 20 பாகங்கள், 395 ஷரத்துகள் மற்றும் 8 அட்டவணைகளைக் கொண்டது
3. 1950 ஜனவரி 26 இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது

a. 1, 3 சரி b. 1, 2 சரி c. 2, 3 சரி d. அனைத்தும் சரி

46. The preamble to the Constitution of India is

a. A part of the constitution but has no legal effect

b. Not a part of the constitution and has no legal effect either

c. A part of the constitution and has the same legal effect as any part

d. A part of the constitution but has no legal effect independently of other parts.

e. Answer not Known

இந்திய அரசியலமைப்பின் முன்னுரை

a. அரசியலமைப்பின் ஒரு பகுதி ஆனால் எந்த சட்ட விளைவையும் கொண்டிருக்கவில்லை

b. அரசியலமைப்பின் ஒரு பகுதியாக இல்லை மற்றும் எந்த சட்ட விளைவையும் கொண்டிருக்கவில்லை

c. அரசியலமைப்பின் ஒரு பகுதி மற்றும் எந்தவொரு பகுதியையும் போலவே சட்ட விளைவைக் கொண்டுள்ளது

d. அரசியலமைப்பின் ஒரு பகுதி, ஆனால் மற்ற பகுதிகளிலிருந்து தனியாக எந்த சட்ட விளைவையும் கொண்டிருக்கவில்லை.

e. விடை தெரியவில்லை

47. The salient features of the Government of India Act, 1935 are:

1. All Indian Federation    2. Provincial Autonomy

3. Dyarchy at the Centre    4. Abolition of Dyarchy in the states

Which of the above is /are correct?

a. 1 and 2    b. 1, 2 and 3    c. 2, 3 and 4

d. 1, 2, 3 and 4    e. Answer not known

இந்திய அரசுச் சட்டம், 1935 இன் முக்கிய அம்சங்கள்:

1. அனைத்திந்திய கூட்டமைப்பு    2. மாகாண சுயாட்சி

3. மத்தியில் இரட்டை ஆட்சி

4. மாநிலங்களில் இரட்டை ஆட்சி முறை ஒழிப்பு

மேலே கொடுக்கப்பட்டுள்ள சட்டங்களில் எவை / எது சரியானவை?

a. 1 மற்றும் 2    b. 1, 2 மற்றும் 3    c. 2, 3 மற்றும் 4

d. 1, 2, 3 மற்றும் 4    e. விடை தெரியவில்லை

48. A Constitutional government by definition is a

a. government by legislature    b. popular government

c. Multi party government    d. Limited government

e. Answer not known

ஒரு அரசியலமைப்பு அரசாங்கம் வரையறையின்படி ஒரு

a. சட்டமன்ற அரசாங்கம்    b. மக்கள் அரசாங்கம்

c. பல கட்சி அரசாங்கம்    d. வரையறுக்கப்பட்ட அரசாங்கம்

e. விடை தெரியவில்லை

49. Which is an incorrect match concerning the parts of the Indian Constitution?

a. Part IV – A - Fundamental Duties
b. Part IX – A - Municipalities
c. Part IX – B - Co-operative Societies
d. Part XIV – A - Official Language

இந்திய அரசியலமைப்பின் பகுதிகள் தொடர்பாக தவறான இணைப்பு எது?
a. பகுதி IV – A - அடிப்படைக் கடமைகள்
b. பகுதி IX – A - நகராட்சிகள்
c. பகுதி IX – B - கூட்டுறவுச் சங்கங்கள்
d. பகுதி XIV – A - அலுவலக மொழி

50. India borrowed the procedure established by law from which country?
a. American constitution b. Japanese constitution
c. Weimar constitution of Germany d. South African constitution

சட்டத்தினால் நிறுவப்பட்ட செயல்முறையை இந்தியா எந்த நாட்டிலிருந்து பெற்றது?
a. அமெரிக்க அரசியலமைப்பு b. ஜப்பான் அரசியலமைப்பு
c. ஜெர்மனியின் வெய்மர் அரசியலமைப்பு d. தென் ஆப்பிரிக்கா அரசியலமைப்பு

51. Which of the following characteristics is not related to the federal government?
a. Written Constitution b. Flexible Constitution
c. Supremacy of the Constitution d. Independent Judiciary

கீழ்க்கண்டவற்றில் கூட்டாட்சி அரசாங்கத்துடன் தொடர்பில்லாத பண்பியல்பு எது?
a. எழுதப்பட்ட அரசமைப்பு b. நெகிழும் அரசமைப்பு
c. அரசமைப்பின் மேலான தன்மை d. சுதந்திரமான நீதித்துறை

52. India's is a federal system of Government because
I. The union legislature is bicameral
